(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

# இல. 2(2).] பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 ஜனவரி 10 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023 ஜனவரி 20, வெள்ளிக்கிழமை)**

350/2022

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, மரண தண்டனையை விதித்த நீதிமன்றம், மரண தண்டனை விதிக்கப்பட்ட திகதி மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கான காரணம் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நபர்களுள் சனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ் ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் விடுதலை செய்யப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 பெப்ரவரி 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3088/2022

கௌரவ திஸகுட்டி ஆரச்சி,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பல சுற்றுலா ஈர்ப்பு இடங்கள் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி இடங்களை இனங்கண்டு அவை தொடர்பான தகவல்களை இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி தகவல்களை இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி இடங்களை கண்டுகளிக்க வருகை தருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான துப்பரவேற்பாட்டு வசதிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3118/2022

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு உற்பத்தி யாதென்பதையும்;

(ii) இலங்கையில் மிளகுச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அதிகளவில் மிளகு உற்பத்திச் செய்யும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் மிளகின் அளவு யாதென்பதையும்;

(v) அதனூடாகப் பெறும் வருடாந்த ஏற்றுமதி வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3157/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) (i) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3168/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு கிலோ கிராம் சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட வியாபாரப் பண்ட வரியானது 2020 அக்டோபர் 13 ஆம் திகதி நள்ளிரவு முதல் 25 சதம் வரை குறைக்கப்பட்டதென்பதையும்;

(ii) இதன்போது பாரிய மோசடி இடம்பெற்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3173/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதியொன்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்பு காரணமாக 2019 திசெம்பர் முதல் இதுவரை அரசாங்கம் இழந்துள்ள வரிப் பணத்தொகை யாது;

(ii) மேற்படி வரிக் குறைப்பு காரணமாக இழக்கப்பட்ட பணத்தொகையை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விதம் யாது;

(iii) மேற்படி வரிக் குறைப்பானது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடையை ஏற்படுத்தியுள்ளதா;

(iv) குறைக்கப்பட்டுள்ள அவ் வரிகளை மீண்டும் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3209/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(iii) புதிதாக பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பித்துள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் வருடாந்தம் கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனவா;

(ii) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3219/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வரும் புலம்பெயர் பறவை வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பறவைகள் எந்த நாடுகளிலிருந்து வருகின்றன என்பதையும்;

(iii) மேற்படி பறவைகள் இலங்கைக்கு வந்த பின்னர் வசிக்கும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பறவைகளைப் பார்வையிட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை விழிப்புணர்வூட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3236/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுநர்களாக பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட பட்டதாரிகளில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் பாடசாலை விடுமுறை காலத்தில் மீண்டும் அரசாங்க நிறுவனங்களுக்கு அழைக்கப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்கள் பயிற்சியின் முடிவில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனரா இல்லாவிடின் அபிவிருத்தி அலுவலர்களாக நியமிக்கப்படுகின்றனரா என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பட்டதாரி பயிலுநர்கள் கடமையாற்றும் அடிப்படை;

(ii) இவர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படும் திகதி;

யாதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3262/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேருவளை தொடக்கம் ஹிக்கடுவை வரையிலான கரையோரப் பிரதேசத்தைச் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில் இன்றளவில் வீழ்ச்சியடைந்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கரையோரப் பிரதேசத்தைச் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் பெற்றுள்ள கடன்கள் தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) சுற்றுலாக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3277/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் பெருமளவான காணிகள் அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டேர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காணிகளை, மீளவும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் உடமையாக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 பெப்ரவரி 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3269/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அ/தெபரவெவ மத்திய மகா வித்தியாலத்திற்கான நீச்சல் தடாகத்தின் நிர்மாணப் பணிகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீச்சல் தடாகத்தின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி நீச்சல் தடாகத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தங்காலை, நெடொல்பிட்டிய கெமுனு மகா வித்தியாலயத்தின் விளையாட்டுப் பாடசாலைக்கு காணிகளை சுவீகரிப்பதற்காக கடந்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டமையை அவர் அறிவாரா;

(ii) இந்த விளையாட்டுப் பாடசாலையின் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3320/2022

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் 100,000 கி.மீ. வீதிகளை காப்பற் இடும் திட்டத்தின் கீழ் இதுவரை காப்பற் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

(ii) மேற்படி திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

(iii) அவற்றில் இதுவரை பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

கிலோமீற்றர்களில் எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில், கொடக்கவெல முதல் பிபிலேகம வரையான வீதியில் 5 கிலோமீற்றர்களை காப்பற் இட்டு அபிவிருத்தி செய்யும் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

3335/2022

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களைக் கோருகின்ற வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடும் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மொழிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மொழிச் சான்றிதழ்கள் மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படாத நாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களை அனுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான தகைமைகளை துரிதமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3372/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் வைத்தியசாலை 2018 ஆம் ஆண்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும், மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகள் இற்றைவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) மருத்துவர்கள் உட்பட மேற்படி மருத்துவமனைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் பிரேத அறை இன்மையால் சடலங்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முருங்கன் வைத்தியசாலைக்கு பிரேத அறையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) முருங்கன் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3579/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iii) இற்றைவரை மேற்படி விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் விடயம் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி தாக்குதலுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுள்ள, கைது செய்யப்பட்டுள்ள மற்றும் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3583/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கு நாளொன்றுக்குத் தேவையான நிலக்கரியின் அளவு யாது என்பதையும்;

(ii) தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடி நிலை காரணமாக நிலக்கரி வழங்குவதற்கு விலைமனுதாரர்கள் முன்வருவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக நிலக்கரிக்கான உடனடி கொள்வனவை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3930/2022

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 746-இந்திரிலிகொட கிராம அலுவலர் பிரிவின், பாடசாலை வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்யும் அடிப்படைப் பணிகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) அதற்கமைய, முதற் கட்டமாக மேற்படி வீதியில் கொன்கிறீட் கற்கள் இடப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி கொன்கிறீட் கற்கள் மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதன் காரணமாக வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் காரணமாக நிதி விரயமாகி இருப்பின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4070/2022

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பிரதான வைத்தியசாலைகளில் ஒன்றான முல்லேரியா, கொழும்பு - கிழக்கு ஆதார வைத்தியசாலைக்கு பல தேவைகளின் நிமித்தம் வருகை தருகின்ற பொதுமக்கள் பயன்படுத்தும் பொதுப் போக்குவரத்துச் சேவையானது மிகவும் வினைத்திறனற்ற நிலையில் உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியாசாலைக்கு வருகை தருவதற்காகவுள்ள ஒரேயொரு பயணிகள் போக்குவரத்துச் சேவையாக வீதி இலக்கம் 164 - சல்மல் உயன – நகரமண்டபம் பேருந்துச் சேவையே உள்ளது என்பதையும்;

(iii) குறித்த பேருந்துச் சேவையும் பி.ப 6.00 மணிக்குப் பின்னர் இயங்குவதில்லை என்பதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பல தேவைகளின் நிமித்தம் மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற மக்களுக்கு வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 பெப்ரவரி 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எரிபொருளின் விலையை நிர்ணயிப்பதற்காக அரசாங்கம் விலை சூத்திரமொன்றை நடைமுறைப்படுத்துகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2022.05.24 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்படி விலைச் சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருளின் விலை திருத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு எரிபொருளின் விலை திருத்தப்பட்ட ஒவ்வொரு திகதியும் திருத்தப்பட்ட தொகையும் ஒவ்வொரு எரிபொருள் வகைக்கும் அமைவாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2022.08.01 ஆம் திகதி உலக சந்தையில் ஏற்பட்ட பெற்றோலியத்தின் விலை வீழ்ச்சி வீதத்திற்கு அமைவாக விலை திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

232/2022

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, வேரதூவ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை, பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தினர் என்பதையும்;

(ii) மேற்படி மைதானத்தை வியாபார நடவடிக்கையொன்றிற்கு வழங்க முன்னாள் பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலத்தை வழங்கும்போது கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட நபரது/ நிறுவனத்தினது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பிரதேச மக்களுக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

303/2022

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்கள் காரணமாக ஏற்படும் சுற்றாடல் அழிவு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி தாவரங்களை அகற்றுவதற்கான வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ள அரச காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) அரச காணிகளில் பயிரிடப்பட்டுள்ள பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்களை அகற்றி இக்காணிகளை பயிர்ச்செய்கைக்காக இளம் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

348/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிபெறுகின்ற பயிலுநர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) கட்டுறுப் பயிற்சி காலத்தினுள் அத்தகைய பயிலுநர் ஒருவருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்தப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 10 வருட காலத்தில் மேற்படி கொடுப்பனவு அதிகரிக்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகரிக்கப்பட்ட தொகை வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி பயிலுனர் ஒருவருக்கென செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3913/2022

கௌரவ உபுல் மகேந்திர ராஜபக்ஷ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் குளங்கள் மற்றும் நதிகளில் அமைந்துள்ள தீவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி தீவுகள் அமைந்துள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் நதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தீவுகள் பல்வேறு வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகள் சுற்றாடல் நேயமிக்க வகையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி தீவுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) குறித்த குத்தகைத் தொகைகள் முறையாக அறவிடப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3916/2022

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை, சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான வைபவம் நடாத்தப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி வைபவத்துக்காக செலவிடப்பட்ட நிதித்தொகை யாது;

(iv) மேற்படி நிதியை வழங்கிய நிறுவனத்தின் பெயர் யாது;

(v) இரத்மலானை விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3932/2022

கௌரவ விஜித ஹேரத்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 2006.12.14 ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கத்துக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2217-SRI ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் மேற்படி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2767-SRI ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய வீதிகள் துறைசார் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய வீதிகளின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு வீதியினதும் பெயர், வீதி இலக்கம் மற்றும் வீதியின் நீளம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) பீ153 ஆம் இலக்க ஹிக்கடுவை-பத்தேகம-நில்ஹேன வீதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட மீளமைப்புத் திட்டத்தின் பிரதியொன்று இச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற் குறிப்பிட்ட வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஹிக்கடுவை, கோனாபீனுவல மற்றும் பத்தேகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டடங்களை அரசுக்கு சுவீகரித்துள்ள காரணத்தினால் பாதிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படுதல் தொடர்பான சகல குறிப்புகளும் அடங்கிய லார்க் குழு தீர்மானங்கள் இச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3934/2022

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஊழியப் படையுடன் சனத்தொகையை ஒப்பிடும் போது இலங்கை மிகப் பெரிய அரச சேவையினைக் கொண்ட நாடு என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அரச மற்றும் முப்படை ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு முன்மொழியப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அதற்கமைவாக குறைக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் காலப்பகுதிகள் யாவையென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரச சேவையில் காணப்படுகின்ற ஊழியர்களின் மிகை நிலைக்குத் தீர்வாக ஓய்வு பெறச் செய்யும் வயது 65 முதல் 60 வரை குறைக்கப்பட்டதாயின், அதற்கு தன்னார்வ ஓய்வு பெறல் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) உள்நாட்டு/வெளிநாட்டு தனியார் தொழில்களில் ஈடுபடுவதற்கு அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கும் நடைமுறையின் கீழ் விடுமுறை பெற்றுக்கொண்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) ஓய்வு பெறச் செய்யும் வயது குறைக்கப்படுவதன் ஊடாக வெற்றிடமாகும் பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்புகள் செய்யப்படாவிடின் தற்போதுள்ள ஊழியர்களை அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் திருத்தியமைத்து திறந்த பரீட்சை முறையொன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) தனியார் துறையின் ஓய்வு பெறும் வயது 65 வரை நீடிக்கப்படுமா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3937/2022

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின் அரசாங்க பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை, அப்பாடசாலைகளில் இன்றளவில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி பாடசாலைகளில் இன்றளவில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4072/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் இன்றளவில் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரச தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலைகளுள் தற்போது செயற்பாட்டு நிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தற்போது செயற்படாத நிலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் இன்றைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலைத் தொழிற்சாலைகள் செயற்படாதுள்ளமையினால் தேயிலைக் கைத்தொழிற்துறை மீது பாதகமான தாக்கம் ஏற்படுகின்றதா என்பதையும்;

(ii) தற்போது செயற்படாத நிலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளை மீள இயங்க வைத்து தேயிலைக் கைத்தொழிற்துறையைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 பெப்ரவரி 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

681/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு புகையிரத்தினதும் சேரிடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பொருட்களை ஏற்றிச் செல்வதன் பொருட்டு அதிகமாக புகையிரதங்களை ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

972/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம், வீரச்சேனை, மாயாபுரம் மற்றும் வன்னிநகர் ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்காக மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கிராமத்திற்கு அப்பால் செல்ல வேண்டுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கிராமங்களில் வாழும், குடிநீர்த் தேவையினைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராமங்களில் காணப்படும் நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1112/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்த 2015-2019 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி மோசடி இடம்பெற்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடி காரணமாக இடம்பெற்றுள்ள நிதிசார் நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மோசடியுடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1518/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த அரிசித் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அதில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் நெல் அறுவடை எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(ii) மேற்படி நெல் அறுவடை அரிசியாக மாற்றப்பட்ட பின்னர் அதன் அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டின் மிகை அரிசி உற்பத்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நெல் அறுவடையும் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவும் ஒவ்வொரு வருடத்துக்கமைய மெட்ரிக் தொன்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆண்டுகளில் மிகை அரிசி உற்பத்தி காணப்பட்டிருப்பின், அதன் அளவு ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி ஆண்டுகளில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1533/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு இலங்கையில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) 2020/2021 பெரும் போகத்தில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி போகத்தில் பயிர்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு சோள விதைகளின் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iv) ஒரு கிலோகிராம் உள்நாட்டு சோள விதையின் விலை மற்றும் ஒரு கிலோ கிறாம் இறக்குமதி செய்யப்பட்ட சோள விதையின் விலை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு ஏக்கரில் சோளப் பயிர் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி விதைகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1676/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எலஹெர – கிரித்தலய சரணாலயத்தின் பரப்பளவு, ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சரணாலயத்திற்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பாரிய சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1901/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட M-9 புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத என்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) அவை எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிபிடப்பட்டுள்ள புகையிரத என்ஜின்களில் இன்றளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் தரித்து வைக்கப்பட்டுள்ள புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) தேவைக்கேற்றுவாறு மாத்திரம் புகையிரத என்ஜின்கள் மற்றும் புகையிரதப் பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) தற்போது தரித்து வைக்கப்பட்டுள்ள புகையிரத என்ஜின்கள் மற்றும் புகையிரதப் பெட்டிகளிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2004/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் பேரூந்துகளின் எண்ணிக்கை மேற்படி மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பேரூந்து உரிமையாளரினதும் பெயர் மற்றும் முகவரி, அவ்வொவ்வொரு பேரூந்தும் மாகாணங்களுக்கு இடையில் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்தா அல்லது மாவட்டத்தினுள் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்தா மற்றும் மாகாணங்களுக்கு இடையில் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்து எனின், மேற்படி ஒவ்வொரு பேரூந்தும் அதன் பயணத்தை ஆரம்பிக்கும் இடத்தினையும் பயணத்தை முடிக்கும் இடத்தினையும் தனித்தனியே குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2046/2022

கௌரவ வேலு குமார்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுனெஸ்கோ அமைப்பினால் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மேற்படி நகரில் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள புனித இடங்களும் கட்டடங்களும் யாவை என்பதையும்;

(ii) அவற்றைப் பாதுகாப்பதற்கு யுனெஸ்கோ அமைப்பு நிதி உதவி அளிக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அளிக்கப்படுகின்ற வருடாந்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள தனியார் கட்டடங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்கும் யாதேனும் நிதி உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி உதவி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட இடங்கள் உள்ளபடியே பேணப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கண்டி நகரை உலக மரபுரிமை நகரமாக பேணிச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2062/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "தாமரை கோபுரம்" கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?